4.48 p.m

Page E-Mail

பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

**கடித எண்.26643/பக5(1)/2018–2, நாள்: 19.12.2018.**

அனுப்புநர்
திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / கருவூல கணக்கு ஆணையர், சென்னை–35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

அய்யா / அம்மையீர்,

பொருள்: பள்ளிக்கல்வி – 2018–19 ஆம் ஆண்டில் தரமுயர்த்தப்பட்ட 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 100 தலைமையாசிரியர் மற்றும் 500 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் விரைவு ஊதிய ஆணை (Express Pay Order) வழங்குதல் – குறித்து.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண். 165, பள்ளிக் கல்வி (அகஇ1)த் துறை, நாள் 07.08.2018.
2. அரசாணை (நிலை) எண். 178, பள்ளிக் கல்வி (அகஇ1)த் துறை, நாள் 28.08.2018.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.18618/ஜி1/இ1/2018, நாள் 09.10.2018.

------

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி தரம் உயர்த்தப்பட்ட பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 100 பள்ளிகளுக்கு 500 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், (ஊதிய நிலை–13–ரூ.35,900–1,13,500). ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 100 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களும் (ஊதிய நிலை–16–ரூ.36,400–1,15,700) தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

2) பார்வை 2ல் காணும் அரசாணையில், பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் உள்ள பள்ளியின் விவரம் பற்றிய வரிசை எண்.48 மற்றும் வரிசை எண்.49க்கு குறிப்பிட்டுள்ள ஒன்றியங்களின் பெயர் குறித்து திருத்தம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3) பார்வை 3ல் காணும் தனது கடிதங்களில், மேற்காண் பார்வை 1 மற்றும் 2 ல் காணும் அரசாணைகளின்படி, தோற்றுவிக்கப்பட்ட 100 தலைமையாசிரியர் மற்றும் 500 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு மாதாந்திர ஊதியம் பெற்று வழங்க ஏதுவாகவும், மேலும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கான தொகுப்பு குறியீடு (Drawing Officer code) மற்றும் தமிழ்நாடு கருவூல தொகுப்பு பதிவேடு (TNTC 70) பெறவும் விரைவு ஊதிய ஆணை (Express Pay Order) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) பள்ளிக் கல்வி இயக்குநரின் கோரிக்கையை ஏற்று, பார்வை 1 மற்றும் 2 ல் காணும் அரசாணைகளின்படி தோற்றுவிக்கப்பட்ட 100 தலைமையாசிரியர் மற்றும் 500 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக விரைவு ஊதிய ஆணை (Express Pay Order) வழங்கப்படுகிறது. மேற்படி பணியாளர்களுக்கான சம்பளம் மற்றும் இதரபடிக்களுக்கான பட்டிகள், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும்போது எனைய இனங்களில் அவை சரியாக இருக்கும் நிலையில் ஏற்று, சம்பளம் அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

5) புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 100 தலைமையாசிரியர் மற்றும் 500 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் பணிபுரியும் தலைமையாசிரிகள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் ஜூலை 2018 முதல் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் சம்பளம் மற்றும் பிற படிகள் பெற தகுதியாகின்றனர் :-

"2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 101 –ஆய்வு
மாநிலச் செலவினங்கள் – AA பொது பள்ளிகளின் ஆய்வு – 01
சம்பளங்கள் (த.தொ.க. 2202 02 101 AA 0104)

6) மேலே பத்தி 4ல் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களுக்கு பணம் பெற்று வழங்கும் அலுவலருக்கான புதிய தொகுப்பு குறியீட்டினை (Drawing Officer code) வழங்குமாறும், தமிழ்நாடு கருவூல விதி தொகுப்பு 70 குறித்த பதிவேட்டினை இப்பணியிடங்களுக்கு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

7) இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.63814/கல்வி-II/2018, நாள்.18.12.2018-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

18.12.18

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
நிதி(கல்வி-II)துறை , சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.